# உலகியலில் மனித மனம்!

பொதுவில், மனிதரில் பெரும் பான்மையினர், உலகம், இயங்குவதும், அதில் படைக்கப் பட்டவையும் மனிதனுக்கானவை என்ற அனுகுமுறை கொண்டே வாழ்கின்றனர். நாம் காண்பவையான காட்சிகள் பலவற்றிலும் நிலை இதுவே! ஒரு கறிகாய் கடையோரம் வரும் மாடு, அல்லது ஆடு எனும் உயிரினங்கள், அவற்றின் வாய்க்கு அகப்படும் கீரையையோ, காயையோ உண்ண முற்படும். அந்நிலையில் அதனைக் கண்ணுற்றால், உரிமையாளர் வாயால் கூச்சலிட்டு விரட்ட முற்படுவார். சில சமயம் அடி விழலாம். அந்நிலையில் ஆடோ மாடோ கொஞ்சம் தின்றிருந்தால், அவை அடையும் வெகுமதி மிக அதிகம். கழியோ குச்சியோ அல்லது வேறு பொருட்கள் கொண்டோ, அடிப்பர். உண்மையில் விளாசித் தள்ளுவர் எனலாம். ஆனால், உண்ண விழைந்த மாட்டுக்கோ, ஆட்டுக்கோ, அவை, அந்த மனிதனுக்கு உரிமயானவை யென்றோ, நாம் செய்வது தவறு என்றோ தெரியாது. அனைத்து மனித மனங்களும், இவ்வாறுதான் உலகம் தமக்கானது எனச் சிந்திக்கின்றன.

கவிஞர் கண்ணதாசன், ஒரு தனிப்பாடலிலே எழுதுவார், பன்றிக்கு மலமே தீனி, பருந்துக்கு பிணமே தீனி யென. உயிர்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன எனச் சொல்ல முடியாது. ஒன்றையொன்று அழித்தே யுண்டு உயிர் வாழ்கின்றன. யானை மரக்கிளைகளை ஒடித்து உண்டாலும், அவற்றின் கழிவு மீண்டும் மரம் முளைக்க வழி கோலும். வள்ளுவப் பெருந்தகை, பிறப்போக்கும் எல்லா உயிர்க்கும் என்கிறார். இன்றைய மனித மனம் சக மனிதனையே மதிக்க விழைவதில்லை. எறும்பும் மனிதனும் தவிர எந்த உயிரினமும் உணவைச் சேமிப்பதில்லை. நாளையப் பொழுது, நமக்கானதா என்பதை தெளிவு படுத்திக் கொண்டாலே, சிந்தையிலும் செயலிலும் குழப்ப மற்ற சூழலை உருவாக்கி அமைதியுடன் வாழ இயலும். இயற்கையோ இறைவனோ, அந்த இயங்கு சக்தி ஒன்று உண்டு என்பதை, அதுதான் கடவுளாகப் பரிமணித்து, மக்கள் கொண்டாடி வருகின்றனர். சிறப்பாக தமிழன் தான், அந்த இயங்கு சக்தியினின்று, கடவுளை தனக்குத் தேவையான குணத்தையும் செயல் நிலையையும் கொண்டதாய்ப் படைக்க முடியும் எனும் அறிவுத் தெளிவுடன் படைத்துக் கொண்டான். செம்மையான நிறத்தைக் கண்டே செவ்வாய் எனப் பெயருமிட்டான். மரபுவழி அறிந்து, யாவற்றுக்கும் அதன் வழி பெயருமிட்டான்.

வேட்டையாடுதல், மரங்களை வெட்டிச் சாய்த்தல், முதலான செயல்கள் மனிதன் மட்டுமே செய்பவை. மனிதன் படைத்த பணம் தான், மனித குலத்தின் முதல் எதிரி. தனது அடிப்படைத் தேவை, உண்ண உணவு, இருக்க இடம், உடுத்த உடை என்பதை மறந்து, பணமே, வாழ்வியலின், அடித்தளம் என வாழத் தலைப்பட்டு, அமைதி இழந்து நகர்கின்றனர். ஒருநாள் இவ்வுலகில் நாம் இல்லாது போகும் போது, ஏதும் நமக்குச் சொந்தமாகப் போவதில்லை என்பதையும் உணர்வதில்லை. இந்த உலகம் படைக்கப் பட்ட நோக்கம், எதுவாக இருக்கும் என எண்ணும் சிந்தனைத் தோன்றினாலே, காழ்ப்பும், மன உளைச்சலும் நீங்கும். கல்வி என்ற ஒன்றை, வணிக தளமாக்கப் பட்டது இந்த பணம் தேடும் சிந்தையால்தான்.

இந்த வாழ்க்கைப் பயணத்தில், தேவையறிந்து, செயல் பட்டாலே, மனிதன் மகிழ்வுடன் வாழ முடியும். இந்த உலகில், நாமும் ஒரு படைப்பு, நம்மைச் சுற்றி, பலவும், வாழவும், நாம் வாழ்விக்கப் படவுமே அத்துனை செயல் நிலையும். நாமும் இவ்வுலகில் படைக்கப் பட்ட ஓர் உயிர்னம், ஓர் அங்கம். இவ்வுலகம் நமக்கு மட்டுமே சொந்தமானதல்ல என்பதை மனித மனம் உணர வேண்டும்.

01-06-2022

கவிஞர் கவிவளவன்